கருத்தரங்கு

வடஆர்க்காடு : பன்முக காட்சி

அரசு அருங்காட்சியகம், வேலூர்

செப்டம்பர் 6, 1985

கட்டுரைகளின் சுருக்க வரைவுகள்

அருங்காட்சியக இயக்ககம்,

சென்னை.600008

***

கருத்தரங்கு

" வட ஆர்க்காடு : : [illegible]முக மாட்சி "

செப்டம்பர் [illegible], 1985

***

நிகழ்ச்சி நிரல்

பிற்பகல் 12.15 மணி முதல்
1.15 மணி வரை — கருத்தரங்கு தொடக்க அமர்வு.

வரவேற்புரை: திரு. என். அரிநாராயணா,
இயக்குநர்,
அருங்காட்சியக இயக்ககம்.

தொடக்கவுரை: டாக்டர் ஔவை நடராசன்
அவர்கள்,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை.

சிறப்புரை: டாக்டர் இரா. நாகசாமி,
(Key note address) இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை.

2.30 மணி முதல்
4.30 மணி வரை — முதலமர்வு.

தலைமை: திரு. "சோமலே"
சென்னை.

(1) "வட ஆர்க்காட்டு சிறப்பு அம்சங்கள்"

திரு "சோமலே",
சென்னை.

(2) "வட ஆர்க்காட்டில் சங்க காலச்
செங்கண்மாநகர்"

திரு. கு. வேங்கடாசலம்,
ஆசிரியர்,
"நன்னன் நாடு",
வளையாம்பட்டி, செங்கம்.

த. பி. பா.

சேர்க்கை எண்: 1503
தொகுப்பு III பக்கம் 380.

(2)

(3) "வட ஆர்க்காடும் அருள் வளமும்"

கலைமாமணி, முத்தமிழ் பெருஞ்சொற்கொண்டல்,
காவியப் பேரறிஞர்
புரிசை சு. முருகேசனார்,
திருவண்ணாமலை.

(4) "~~வரலாற்றில் வட ஆர்க்காடு~~" வட ஆர்க்காடு மாவட்டத்தின் இதழ் வெளியீடுகள்

பேராசிரியர் என். பெருமாள்,
தமிழ்த்துறை,
அரசினர் திருமகள் கலைக் கல்லூரி,
குடியேற்றம்.

(5) "வேலூர் சிப்பாய்க் கலகம்"

நிருவாகி
அப்துல் அக்கீம் கல்லூரி,
மேல்விசாரம்.

(6) "வட ஆர்க்காடு மாவட்ட கோட்டைகள்"

திரு. ம. காந்தி,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
வேலூர்.

(7) "வரலாற்றிலும் கலையிலும் காவேரிப்பாக்கம்"

திரு. வ. ந. சீனிவாச தேசிகன்,
காப்பாட்சியர் (தொல்பொருளியல்)
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

(8) "வட ஆர்க்காடு மாவட்டக் கலையும் கட்டிடக் கலையும்"

திரு. ச. இலக்குமிநாராயணன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
சேலம்.

த.பி.பா.

(9) " வட ஆர்க்காடு நாணயங்கள் "

திரு. நீ. சங்கரநாராயணா,
காப்பாட்சியர் (நாணயவியல்)
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

(10) " வட ஆர்க்காட்டில் கிறித்தவப் பண்பாடு "

டாக்டர் செயகரன் ஐசக்,
முதல்வர்,
வூரிசு கல்லூரி,
வேலூர்.

(11) " வட ஆர்க்காட்டில் இசுலாமியப் பண்பாடு "

பேராசிரியர் அப்துல் காதர்,
தமிழ்த்துறை,
இசுலாமியாக் கல்லூரி,
வாணியம்பாடி.

(12) " வட ஆர்க்காட்டில் கலை வளம் "

திரு. பி. முனிரத்தினம்,
தலைவர்,
தமிழ்நாடு ஓவிய ஆசிரியர் சங்கம்,
வேலூர்.

(13) "ஆங்கிலேயர் ஆட்சியில் காவல் துறை பயிற்சிக் கல்லூரி"
திரு. பி. பி. [illegible] இ.கா.ப.
டி. ஐ. ஜி.

மாலை 4.30 மணி முதல் 4.45 மணி வரை — தேநீர்.

4.45 மணி முதல் 6.30 மணி வரை — இரண்டாம் அமர்வு.

தலைமை : டாக்டர் இரா. நாகசாமி,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை.

த. பி. பா.

(1) "வட ஆர்க்காட்டில் கல்வி வளம்"

திரு. வே. இரமணி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வட ஆர்க்காடு.

(2) "வட ஆர்க்காட்டில் வளர் தமிழ்"

பேராசிரியர் இரா. மதிவாணன்,
இயக்குநர் (முழுப் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்,
சென்னை.

(3) "வட ஆர்க்காட்டுக் கனிம வளம்"

திரு. எ. சியார்ச்சு சேசுதாசன்,
காப்பாட்சியர் (புவியியல்)
அரசு அருங்காட்சியகம்;
சென்னை.

(4) "வட ஆர்க்காட்டு வனவளம்"

திரு. பா. ஜவகர்,
காப்பாட்சியர் (விலங்கியல்)
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

(5) "வட ஆர்க்காட்டுத் தாவரங்கள்"

திரு. கி. சீனிவாசன்,
தலைப் பேராசிரியர் (தாவரவியல்)
ஊரிசு கல்லூரி,
வேலூர்.

(6) "வட ஆர்க்காட்டில் பழங்குடி மக்கள்"

திரு. டி. ஞானவேலு,
மாவட்ட வனத்துறை அலுவலர்,
வேலூர்.

ந பி. பா.

(7) "வட ஆர்க்காட்டில் தொழிலும் தொழில்நுட்பமும்"

டாக்டர் ஆர். அய்யாசாமி,
முதல்வர்,
வேலூர் பொறியியற் கல்லூரி,
வேலூர்.

(8) "சிறு தொழில் வளர்ச்சியும் வட ஆர்க்காடு மாவட்ட தொழில் மையத்தின் பங்கு பணியும்"

திரு. ஏ. ஆர். நாதன்,
பொது மேலாளர்,
மாவட்டத்தொழில் மையம்.
வேலூர்.

தொகுப்புரை : டாக்டர் இரா. நாகசாமி.

நன்றி நவிலல்: திரு. ம. சாந்தி,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
வேலூர்.

*****

சங்க காலத்துச் "செங்கண்மா" நகர்

கு. வேங்கடாசலம்

வடார்க்காடு மாவட்டத்தில் செங்கம் வட்டத்திலுள்ள செங்கம், சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் "செங்கண்மா" என்று சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், சங்ககாலத்தில் இந்நகரை வேளிர் குல மன்னர்கள் ஆண்டதாக குறித்துள்ளார். "செங்கண்மா" நகரின் தொன்மையை மலைபடுகடாத்திலிருந்து அறியலாம்.

இன்று வேலூர் மாவட்டத்தில் சவ்வாது மலைகள் எனக் கூறப்படும் பகுதியே சங்க காலத்தில் "பல்குன்றக்கோட்டம்" எனப்பட்டது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் பெண்கொலை புரிந்த நன்னன் வேறு "செங்கண்மா" நன்னன் வேறு என்று டாக்டர் பி.எல். சாமி அவர்கள் கருதுகின்றார். மத்திய அரசின் தொல்பொருள் துறையினர் "நன்னன் கோட்டை மேடு" என்ற மேட்டில் அகழாராய்ச்சி செய்து கோயில் ஒன்றையும் கண்டுள்ளனர். இப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களால் வெளியிடப் பட்ட 121 நாணயங்கள் கிடைத்துள்ளன. செங்கத்தில் பழங்கால முது மக்கள் தாழிகள், தங்க நாணயங்கள், சமண, பௌத்தக் குரவர்களின் சிலைகளும் கிடைத்துள்ளன.

இந்நகரைச் சுற்றியும் உள்ள ஊர்களின் பெயர்கள் அக்காலத்தில் அங்கு ஒரு பெரும் நகரம் இருந்ததற்கு அடையாளமாக உள்ளன. இங்குள்ள மடுவுகளில் இன்றும் முதலைகள் வாழ்கின்றன. சவ்வாது மலை மேல் உள்ள புலியூர் என்ற கிராமத்தின் சுற்றுப் புறங்களில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கோடாரிகள் கிடைக்கின்றன. செங்கத்தைச் சுற்றியுள்ள இடங்களில் கற்கால மனிதர்களின் குடியிருப்புகள் காணப்படுகின்றன.

எனவே இச்சான்றுகளிலிருந்து இப்பகுதியில் மனிதன் கற்காலந்தொட்டே வாழ்ந்து வந்திருக்கின்றான் என்றும், இப்பகுதியை வேளிர்குல மன்னர்களில் ஒருவன் கைப்பற்றி, "செங்கண்மா" நகரை நிறுவினான் என்றும் அறியப்படுகிறது. இப்பகுதி ஆறாம் நூற்றாண்டிலிருந்து பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று செங்கம் நடுகற்களின் கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகிறது. "செங்கண்மா நகரம்" ஒரு பழம்பெரும் சிறப்புடைய நகராகும் என்று அகழ்வாராய்ச்சி ஒன்றே மெய்ப்பிக்க முடியும்.

வளர் ஓவியக் கலை

பி. முனிரத்தினம்

வளர் ஓவியக் கலையைப் பற்றி தற்போது பேசுவது இன்றியமையாத ஒன்றாகும். பண்டைக் காலத்தில் வாழ்ந்த ஆதி-மனிதர்கள் தங்கள் கருத்துகளை ஓவியங்களாகக் குகைகளில் தீட்டினர். இத்தகைய ஓவியங்கள் ஸ்பெயினில், அல்த்திமேரா குகைகளிலும் வடார்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கு அருகிலுள்ள பகுதிகளிலும், மதுரைக்கு அருகிலுள்ள பகுதிகளிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஓவிய வரலாறு:-

ஓவிய வரலாற்றுக் கால குறிப்பின்படி எகிப்திய ஓவியம், கிரேக்க ஓவியம், உரோமாபுரி ஓவியம் ஆகியவைகளும், பிறகு பைசன்டைன் கலை ஓவியமும், கோதிக்கு ஓவியக் கலை முறையும் வளர்ச்சியடைந்தன.

இத்தாலிய ஓவிய வரலாறு:-

கி.பி. 1347-இல் பிளாரன்சு மரபினர் முதன் முதலில் ஓவியர்க்கென ஓவியச் சங்கம் ஒன்றை நிறுவினர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜியாட்டோ (Giotto) ஐரோப்பிய ஓவியக் கலையின் தந்தை எனலாம். கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் உலகப் புகழ்பெற்ற லியானார்டோ டாவின்சி, மைக்கேல் ஆஞ்சிலோ போன்றவர்கள் பிளாரன்சு கலை மரபைத் தழுவி ஓவியங்களை வரைந்தனர். பிறகு பல மரபுகளைத் தழுவிய ஓவியங்கள் வரையப்பட்டன. கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் பிக்காசோ நவீன ஓவிய முறைகளில் கலை விருந்து அளித்தார். நவீன ஓவியம் ஐந்து பிரிவுகளை உடையன.

இந்தியாவில் ஓவியத்தின் வளர்ச்சி:-

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் இந்திய ஓவியர்கள் இரு பரிமாணக் கொள்கை அடிப்படையில் ஓவியங்கள் வரைந்தனர். பிறகு வெள்ளையர்களால் இந்திய ஓவியக் கலை நலிவுற்றது. பின்னர் வங்கக் கலை முறை தோன்றியது. ரவி வர்மா மிக அற்புதமான முறையில் ராம் சௌந்தரியும், ஜி.டி.பால்ராசு போன்றோர் அற்புதமான ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். கி.பி.20-ஆம் நூற்றாண்டில் ஓவியக் கலை வளர்ச்சிக்கு பலர் பெரிதும் பாடுபட்டனர்; [illegible].

வடார்க்காட்டில் வளர் தமிழ்

இரா. மதிவாணன்

சோழன் குடிப்பூ ஆத்தி மாலை. இதற்கு ஆர் என்னும் பெயருண்டு. ஆர் என்னும் ஆத்தி மரங்கள் நிறைந்த காடு ஆர்க்காடு எனப்பட்டது. சங்க காலத்திற்குப் பிறகு இப்பகுதி பல்வேறு குறுநில மன்னர்களால் ஆளப்பட்டிருப்பினும் சங்க காலத்திற்கு முன்பு இது சிலகாலம் சோழநாட்டுப் பகுதியாகவும், சிலகாலம் தொண்டைநாட்டுப் பகுதியாகவும் இருந்தது எனச் சொல்லலாம் . பத்துப்பாட்டின் இறுதிப் பாடலான மலைபடு கடாத்தின் பாட்டுடைத் தலைவன் செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் அரசு வீற்றிருந்த கொடைவளம் பெருக்கி தமிழின் நடைவளம் வளர்த்த நாடாண்ட தலைநகரமாகிய செங்கண்மா என்னும் நகரம் இப்போது செங்கம் எனத் திரிந்து வழங்குகிறது. செங்கத்தில் மலைபடு கடாம் பாடக் கல்வெட்டு கிடைத்துள்ளது. வடார்க்காடு மாவட்டம் இப்பொழுது 7,386 சதுரக்கல் பரப்புடையதாயினும் பண்டைக்காலத்தில் அண்டை மாவட்டங்களோடு இணைந்த சில குறுநிலப் பகுதிகளாகப் பிரிந்திருந்தது. அகநானூற்றில் 183-ஆம் பாடலைப் பாடிய புலவர் ஆர்க்காடு கிழார் எனப்படுகிறார். வடார்க்காடு, தென்னார்க்காடு ஆகிய இரு பகுதியையும் இணைத்த மலாடு எனப்படும் மலைநாட்டை திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு மலையமான் திருமுடிக்காரி ஆட்சிபுரிந்தான்.

புகழ்பெற்ற தெள்ளாற்றுப்போர், வல்லப்போர், தலைக்கோட்டைப் போர் ஆகிய போர்க்களங்களும், வேலூரிலும், செஞ்சியிலும் உள்ள கோட்டைக் கொத்தளங்களும், நாயன்மார்கள் முதல் அருணகிரியார் வரை பலராலும் பாடப்பட்ட திருவண்ணாமலை கோயிலும், செய்யாறு, திருவலம் ஆகிய சிவனியச் சிற்றூர்களும் வடார்க்காடு மாவட்டத்தின் வரலாற்றுப்

பெருமைக்குச் சான்றுகளாகின்றன. பல்லவரும், சமணரும், முகமதியரும், தெலுங்கரும், ஆட்சிபுரிந்த காலங்களிலும் தமிழ் வளர்ச்சி இடையறாது இம்மண்ணில் வளர்ந்திருக்கிறது. தொடர்ந்து வரும் ஆயிரத்தாண்டுகளாக தமிழ் நலம் கமழும் புலவர்களும், வேந்தர்களும், புரவலர்களும் தமிழ் வளர்த்து வளம்பல பெருக்கி நலம்பல விளைத்த வடார்க்காட்டுப் பகுதியின் வரலாறு கற்போர்க்குக் கழிபேருவகை நல்குவதாகும்.

சிறு தொழில் வளர்ச்சியும் வடார்க்காடு மாவட்டத் தொழில் மையத்தின் பங்கும் பணியும்

எ. ஆர். நா[illegible]

சிறு தொழிலும், கிராமத் தொழிலும், பொருளாதாரத்தின் முக்கிய பங்கு வகிப்பதால், அதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இம்மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இம்மையம், சிறுதொழில் தொடங்குபவர்களுக்கும், தொழில் முனைஞர்களுக்கும் செய்யும் உதவிகளாவன:

சிறுதொழில்கள், குடிசைத் தொழில்களைப் பதிவு செய்தல், தொழிற்கூட்டுறவு சங்கங்களை நடத்துதல், தொழில் திட்டங்களை வகுக்க அறிவுரை வழங்குதல், வேலையற்ற இளைஞர்களுக்குத் "தொழில் தொடங்க அறிவுரை வழங்கி தொழில் தொடங்க ஊக்குவித்தல், தொழில் தொடங்குபவர்களுக்குப் பயிற்சி அளித்தல், புதிய தொழில்களுக்குக் கடனுதவி அளித்தல், சிறு தொழில் நிறுவனங்கள், மத்திய, மாநில மானியத்தொகையைப் பெற ஆவன செய்தல், சிறு தொழில்களுக்கு மின் இணைப்புப் பெற வழிவகுத்தல், சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பங்கீட்டு முறையில் ஒதுக்கீடு செய்தல், "சிட்கோ" மூலம் தொழில் தொடங்க உதவி செய்தல், ஆதித்திராவிடர் மற்றும் மலைச் சாதியினர் தொழில் தொடங்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக முன் வைப்புத் தொகை அளிக்க பரிந்துரை செய்தல், தொழிற்கூடம் கட்டுவதற்கு சிமென்ட் வழங்க பரிந்துரை செய்தல், 18 முதல் 35 வயதுள்ள பத்தாம் வகுப்பு படித்தவர்கள் தொழில் தொடங்க தேசிய வங்கிகள் மூலம் கடன்பெற தேர்வு செய்ய பரிந்துரை செய்தல்.

வட ஆர்க்காடு மாவட்ட கோட்டைகள்

ம. காந்தி

வடார்க்காடு மாவட்டத்தில் இயற்கை அரண்களாக மலைகளும், காடுகளும், ஆறுகளும், மட்டுமின்றி செயற்கை அரண்களாக கோட்டைகளும், அகழிகளும் அமைந்துள்ளன.

அக்கோட்டைகளில் முக்கியமானவை வேலூர், வந்தவாசி, ஆரணி, ஆர்க்காடு, சேத்துப்பட்டு, கரிகிரி, ஆகிய ஊர்களில் உள்ளன. வேலூர் கோட்டையை கட்டியவர்கள் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இக்கோட்டையின் மொத்தப் பரப்பளவு 136 ஏக்கர். கோட்டையைச் சுற்றி திறந்தவெளியும், அதை அடுத்து சுமார் 190 அடி அகலமும், 15 அடி ஆழமும் கொண்ட அகழி உள்ளது. அதில் முதலைகள் வளர்க்கப்பட்டன. கோட்டையினுள் சலகண்டேசுவரர் கோயிலும், ஒரு கிருத்தவ ஆலயமும், ஒரு மசூதியும் உள்ளன.

வந்தவாசியிலுள்ள கோட்டை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மராத்தியரால் கட்டப்பட்டது. ஆரணி கோட்டை விசயநகர அரசர்களால் கட்டப் பட்டிருக்கவேண்டும். இதன் நடுவில் கைலாசநாதர் கோயில் உள்ளது. சேத்துப்பட்டுக் கோட்டை, கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் தாவுத்கானால் கட்டப்பட்டது. இது ஒரு மண்கோட்டையாகும். இதன் நடுவில் ஒரு மசூதியும், கிணறும் உள்ளன. ஆர்க்காடு கோட்டையும் ஒரு மண்கோட்டையாகும். இதனுள்ளே ஒரு மசூதியும் , பெரியகுளமும் உள்ளன. திமிரியில் உள்ள கோட்டை சின்னபொம்ம ரெட்டியின் சகோதரியான திம்மக்காள் என்பவரால் கட்டப்பட்டது. காட்பாடி அருகில் கரிகிரியில் ஒரு சிறிய கோட்டை உள்ளது. அதன் நடுவில் பள்ளிவாசல் ஒன்று உள்ளது. படவேட்டில், இராமசாமிகோயிலுக்கு மேற்கில் ஒரு கோட்டை இருந்தது.

இவை தவிர வேலூர் நகருக்குக் கிழக்கில் மூன்று மலைகளில் மலைக்கோட்டைகளும் அரண்களாக அமைந்துள்ளன.

வடஆர்க்காடு சவ்வாது, ஏலகிரிமலை, மலைவாழ், பழங்குடி மக்கள்

டி. ஞானவேலு

வடஆர்க்காடு மாவட்டத்தின் நிலப் பரப்பில் மூன்றில் இரு பங்கு மலையும், மலை சார்ந்த பகுதியும் ஆகும். இதில் காரக்காடுகளும் குறைந்த உயரமுடைய மலைக்காடுகளுமுள்ளன. இம்மலையில் கிடைக்கும் விலை உயர்ந்த சந்தன மரங்கள், அதிக வருவாய் தரும் சிறு விளைச்சல்களான நெல்லி, புளி, பூச்சக்காய், சீயக்காய், மருந்துப் பொருட்கள், தேன் முதலியவைகள் நம் நாட்டில் கிடைப்பதில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஆண்டிற்கு 850 மி.மீ. வரை மழை பெறும் இம்மலைப்பகுதி சமதட்பவெட்ப நிலையை உடையது. இம்மலைவாழ் மக்கள் கவுண்டர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

இம்மலைவாழ் மக்கள் 307.11 சதுர கிலோமீட்டர் பரப்பில் 25 ஊராட்சிகளில் ஏறக்குறைய அறுபது கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 61,372 ஆகும். இதில் பழங்குடியினர் எண்ணிக்கை 38,706 ஆகும். இது இம்மலையில் வாழும் மக்களில் 63.1 விழுக்காடு ஆகும். விவசாயம், கால்நடை வளர்த்தல் முதலியன இவர்களின் முக்கியமானத் தொழில்கள். வனத்துறையில் சந்தன மரங்களைச் சேகரித்தல், சிறு விளைச்சல் வனப்பொருட்கள் சேகரித்தல், சாலைபோடுதல், காடுகளை பாதுகாத்தல் முதலிய பிற பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பழங்குடிகளில் 6.3 விழுக்காடு மக்களே எழுத்தறிவு பெற்றுள்ளனர். இவர்களின் முக்கிய தொழிலான வேளாண்மை சரிவர பயன் தராததால் இவர்களின் பொருளாதாரம், மிகவும் பின்தங்கியுள்ளது. பலர் பால்வினை நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பின்தங்கிய இம்மக்களை பொது வாழ்வில் உயர்த்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அரசு பல துறைகள் மூலம் பல திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசு, வனத்துறை மூலம் இம்மக்களுக்கு கால்நடைகளைக் காட்டில் மேய்ப்பதற்கும், புல் முதலிய தீவனம் சேகரிப்பதற்கும், வீடு கட்டவும், வேளாண்தொழிலுக்குச் சிறு மரங்கள் சேகரிப்பதற்கும், எரிபொருட்கள் சேகரிப்பதற்கும் இலவச அனுமதி அளித்துள்ளது. மேலும் பள்ளிகளில் இலவசக் கல்வி, மாணவர்களுக்கு இலவச உணவு உடைகள் வழங்குதல், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் ஆகியவைகளினால் இம்மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் வனவளம்

பா. ஜவகர்

இன்றைய ஆர்க்காடு நகரத்தில் ஒரு காலத்தில் ஆறு முனிவர்கள் அருந்தவம் புரிந்ததால் "ஷடாரண்யா" என்று வட மொழியிலும், ஆறுகாடு என்று தமிழிலும் பெயர் ஏற்பட்டது. ஆறுகாடு நாளடைவில் ஆர்க்காடாக மாறியது. "நெல்லிடை மலரும் அரியலங்கழனி ஆர்க்காடு" என்று சங்க இலக்கியத்தில் ஆர்க்காடு புகழப்படுகிறது. இத்தகையப் புகழ்பெற்ற ஆர்க்காடு நகரைத் தன்னகத்தே கொண்ட வட ஆர்க்காடு மாவட்டத்தில் காடுகளுக்கும் அக்காடுகளை உறைவிடங்களாகக் கொண்ட உயிரினங்களுக்கும் குறைவே இல்லை.

இம்மாவட்டத்தின் நில பரப்பில் 28 விழுக்காடு காடுகள் பரவியுள்ளன. அக்காடுகளை கீழ்ப் பகுதி காடுகள், மேற்பகுதிக் காடுகள் என இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். கீழ்ப் பகுதி காடுகள் வேலூர் பகுதிகளிலும், மேற்பகுதி காடுகள் திருப்பத்தூர் பகுதிகளிலும் உள்ளன. கீழ்ப் பகுதி காடுகளில் குறிப்பிடத் தக்கவை ஜவ்வாது மலைக் காடுகளே. மேற்பகுதிக் காடுகளில் குறிப்பிடத்தக்கவை ஏலகிரி மற்றும் ஜவ்வாது மலைக்காடுகளுமாகும்.

மேலும் குடியாத்தம் தாலுக்காவில் கிழக்குத் தொடர்ச்சி மலையின் காடுகளும், திருவண்ணாமலை, சாத்தனூர், ஆர்க்காடு, செங்கம், பொன்னையார் ரிசர்வ் காடுகளும் குறிப்பிடத் தக்கவை. இக்காடுகளில் தேக்கு, ஈட்டி, வாகை, மூங்கில், சந்தன மரங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

தென்பெண்ணை, பாலாறு, ஆகிய நதிகள் தவழ்ந்தோடி இம்மாவட்டத்தைச் செழிக்கச் செய்கின்றன. ஆளுடைப்பிள்ளையும், அப்பர் பெருமானும் தங்களது தேனொழுகும் பதிகங்களால் பாடிப் போற்றிய திருவண்ணாமலை இம்மாவட்டத்திற்குப் புகழை அளிக்கிறது.

த.பி.பா.

இம்மாவட்டத்தில் குறிப்பிட்ட காடுகள் உயிரினங்களின் உறைவிடமாகவும், தண்ணருஞ்சோலைகளாகவும் திகழ்கின்றன. சம்பந்தர் காலத்தில் திருவண்ணாமலைக் காடுகளில் மழகளிறும், மடப்பிடியும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. தினைப் புனங்களில் பச்சைக்கிளிகள் கூட்டம் கூட்டமாக வந்து தங்குமாம். வேலூர் குன்றுகள் சூழ்ந்ததோர் அழகிய நகரம். அந்நகரின் உள்ளும் புறமும், கொடி முந்திரி, ஆரஞ்சு போன்ற பழத்தோட்டங்களும், தென்னை பலா போன்ற மரத் தோப்புகளும் வளப்புடன் விளங்குகின்றன.

சம்பந்தர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் மழகளிறும், மடப்பிடியும் தற்போது இம்மாவட்டத்தில் காணப்படவில்லை. இது மட்டுமின்றி 17-18 ஆம் நூற்றாண்டுகளில் இம்மாவட்டத்தின் காடுகளில் வாழ்ந்ததாகக்கூறப்படும் புலி, சிறுத்தை மற்றும் சிறுத்தைப் புலியும் தற்போது இம்மாவட்டத்தின் காடுகளில் காணப்படவில்லை ஊர்வன, பறப்பன மற்றும் பல இனப் பாலூட்டிகளும் தற்போது காணப்படுகின்றன.

எனவே பல்வேறு உயிரினங்களின் உறைவிடங்களான காட்டின் பெயரைக் கொண்ட இம்மாவட்டத்தில் வன வளத்திற்கு குறைவே இல்லை எனக் கூறலாம்.

வட ஆர்க்காடு மாவட்டத் தாவரங்கள் - ஒரு கண்ணோட்டம்.

கி. சீனிவாசன்.

தமிழ்நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தின் சிறப்பு அதன் சந்தன மரங்களே. வடார்க்காடு மாவட்டத்தில் பொருளாதாரச் சிறப்புடைய பயனுள்ள தாவரங்கள் ஏராளம் உள்ளன. தாவரவியல் தொடர்பில் மால்வேசி குடும்பத்தில் பூவரசும், வெண்டையும், க்ருசிபெரி குடும்பத்தில் கோசு, முள்ளங்கி, கடுகு, நூல்கோலும், லெகுமினோஸி குடும்பத்தில் உளுந்து, பச்சைப் பயிறு, கடலை, மொச்சை, அவரை வகைகளையும், குக்கர்பிட்டேசி குடும்பத்தில் தர்பூசணி, வெள்ளரி, பாகல், பூசணி, புடலை, பீர்க்கை முதலியனவும், அம்பெல்லிஃபெரே குடும்பத்தில் காரட், கொத்தமல்லியும், கம்பாளிடே குடும்பத்தில் சூரியகாந்தி, கரிசலாங்கண்ணி தவனமும், கன்வால்வுலேஸி குடும்பத்தில் வள்ளிக்கிழங்கும், சோலனேஸி குடும்பத்தில் கத்தரி, முள்ளுக்கத்திரிக்காய், புகழ்பெற்ற இம்மாவட்டத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மிளகாய், தக்காளியும், யூஃபோர்பியேசி குடும்பத்தில் ஆமணக்கும், அமராந்தேசி குடும்பத்தில் கீரைவகைகளும், அராய்டி குடும்பத்தில் சேனை, சேப்பங்கிழங்கு வகைகளும், சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தாவரங்கள் ஆகும்.

பழத்தோட்டங்களிலிருந்து மா, சீதா, சப்போட்டா, எலுமிச்சை, கொய்யா, போன்ற பழவகைகள் மிகுதியாக விற்பனைக்கு வருகின்றன. சூரிய காந்திச் செடிகள்–சிறிய பூவினை உடைய தாவரவகை, மலையில் பல இடங்களில் பயிரிடப்பட்டு அதன் விதைகளைச் சேகரித்து எண்ணெய் எடுத்து அந்த எண்ணெயை மலைவாழ் மக்கள் பயன்படுத்துகின்றனர் என்பது இம்மாவட்டத்தின் சிறப்பியல்பாகும்

இம்மாவட்டத்தின் பல இடங்களில் காணப்படும் மற்றொரு இன்றியமையாத தாவரம் சர்ப்பகிராந்தி என்னும் ராவுல்பியா சர்பன்டைனா. இச்செடியின் வேர் பாம்புக்கடி நஞ்சினை முறித்து குணமளிக்கக்கூடிய தன்மை உடையது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. மருத்துவத்திற்குப் பயன்படும் மற்றும் ஏராளமான தாவரவகைகளை உடையது இம்மாவட்டம். பயனுள்ள பலவகை மரங்களும், இம்மாவட்டத்தில் உள்ளன. சவ்வாது மலைத் தொடரில் காணப்படும் மூங்கில்காடு குறிப்பிடத்தக்கதாகும்.

வட ஆர்க்காட்டு சிறப்பு அம்சங்கள்

"சோமலே"

வட ஆர்க்காட்டு மாவட்டம் சங்க காலத்திலிருந்தே புகழ் பெற்றது. பெரும்பாலான சங்க இலக்கியங்கள், இம்மாவட்டத்திலுள்ள ஆர்க்காடு நகரையும், செங்கண்மா நகரையும் புகழ்ந்து கூறுகின்றன. சங்ககாலத்தில் செங்கண்மா" நகரை வேளிர் குல மன்னர்கள் ஆண்டதாக பல சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. செங்கண்மா நகரை ஆண்ட "நன்னன்" வேறு, பெண்கொலை புரிந்த "நன்னன்" வேறு என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர். சங்க காலத்திற்குப் பிறகு இம்மாவட்டத்தின் பல பகுதிகள், பல்லவர், ஹொய்சளர், விசயநகர அரசர்கள் போன்ற பல்வேறு அரசர்களின் ஆட்சியிலிருந்தது. வேலூர் கோட்டையில் 1806-ஆம் ஆண்டில், இந்திய வீரர்கள் முதன் முதலில் ஆங்கிலேயரை எதிர்த்துப் புரட்சி செய்தனர்.

இம்மாவட்டத்திற்கு ஏலகிரி, சவ்வாது மலைகள் இயற்கை அரண்களாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் தொன்மையை திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில், மகேந்திரவாடி, [illegible]ங்கலம் மற்றும் மாமண்டூரிலுமுள்ள தொல்பொருள் எச்சங்கள் எடுத்தியம்புகின்றன. திருவண்ணாமலை, கார்த்திகை தீப விழா இம்மாவட்டத்திற்கு சிறப்பை அளிக்கிறது. மேலும் தக்கோலத்தில் சலந்தேசுவரர் கோயில், திருவலத்தில் வில்வநாதேசுவரர் கோயில், விரிஞ்சிபுரத்தில் வழித்துணைநாதர் கோயில் போன்ற கோயில்கள் இம்-மாவட்டத்தின் சிறப்புகளைத் திறனைப் பறை சாற்றுகின்றன.

1-8-1856 அன்று சென்னையிலிருந்து வாலாஜாபாத் ரோடு வரை இருப்புப் பாதை போடப்பட்டு இம்மாவட்டம் சென்னையுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தில் இந்து மதம் மட்டுமின்றி, முகமதிய, கிருத்துவ, பௌத்த, சமண மதங்களும் தழைத்தோங்கியதற்குப் பல சான்றுகள் உள்ளன.

வட ஆர்க்காடு மாவட்டத்தினரின் இதழ் வெளியீடுகள்

பேராசிரியர் எஸ். பெருமாள்

* * *

1806-ஆம் ஆண்டில், வேலூர் கோட்டையில் ஏற்பட்ட புரட்சியும், 1857-இல் வடஇந்தியப் பகுதிகளில் ஏற்பட்ட புரட்சியும் அடக்கப்பட்டு ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்டது. புதிய ஆட்சியில், புதிய மாற்றங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த ஆர்வம் கொண்டவர் பல நூல்களை வெளியிட்ட தோடு, பல இதழ்களையும் வெளியிடத் தொடங்கினர். இவ்வாறு வெளியிடப் பட்ட இதழ்களுள் வட ஆர்க்காடு மாவட்டதினர் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட இதழ்களை வெளியிட்டுள்ளனர்.

1831-ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து கிறித்தவ சமயப் பிரச்சாரக் கழகம் வெளியிட்ட "தமிழ்ப் பத்திரிகை" என்னும் இதழே, தமிழில் முதன்முதலாக வெளிவந்த செய்தி இதழ் எனக் கொள்ளலாம். வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொருத்தவரை, 1887-இல் வேலூர் சி.ஜி. அப்புமுதலியார் என்னும் கோவிந்தராஜமுதலியார் வேலூர் வாணிநிகேதன் அச்சகத்தில் அச்சிட்டு "ஸ்ரீலோக ரஞ்சனி" என்னும் திங்கள் இதழை வெளியிட்டார். இவரே வேலூர் "ஜநாநுகூலநி" என்னும் இதழின் ஆசிரியராகவும் இருந்தவர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தினர் வெளியிட்ட இதழ்களை, 1950-க்கு முன்பும், பின்பும் என இரு தொகுதிகளாகப் பிரிக்கலாம். 1950-க்கு முன்பு இம்மாவட்டத்தினரால் 90 இதழ்கள் (தமிழ்: 85, ஆங்கிலம்: 5) வெளியிடப் பட்டுள்ளன. 1950-க்குப் பின்னர் இரு நாளிதழ்கள் உட்பட 124 இதழ்கள் வெளிவந்துள்ளன.

"அமெரிக்கன் ஆர்க்காடு மிஷன்" சபையினர் 1892-இல் ஆரணியில் "மங்கல வசனம்" (1895) என்னும் திங்களிதழை வெளியிட்டனர். ஊத்தரன் சபையினரின் "சத்தியசாட்சி" திங்கள் இதழ் 1920-இல் வெளியிடப்பட்டது. பிறகு 1897-இல் "சித்தாந்த தீபிகை" என்னும் திங்கள் இதழின் முதல் ஐந்து இதழ்களுக்கு மறைமலையடிகள் ஆசிரியராக இருந்தார். 1915-இல் வெளியிடப் பட்ட "வேதாந்த தீபிகை" என்னும் இதழும் வேதாந்த இலக்கியத்தைச் சேர்ந்தவை. 1922-இல் "ஸநாதன தர்மம்", இந்து சமய வைதீகக் கொள்கை களைக் காக்க வெளியிடப்பட்டது.

பிறகு 1936-இல் திருமுருக கிருபானந்தவாரியர் "திருப்புகழமிர்தம்" திங்களிதழையும், கொழும்பலூர் மே. சக்கிரவர்த்தி நாயனார் "விவேக சக்தி" (1931) இதழையும் வெளியிட்டனர்.

க. பி. பா.

நாட்டு விடுதலைப் போராட்ட இயக்கத்தின்போது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட "North Arcot Patriot" (1908), "சுகோதயம்" (1925) ஆகியவை சிறந்த இதழ்களாக விளங்கின. திரு. ப. ஜீவானந்தம் "சமதர்மம்" (1934) இதழை வெளியிட்டார். திரு. ஜி. அருணாசலம் "செம்பறவை" (1949) என்னும் இதழை வெளியிட்டார். திராவிட இயக்கத்தின்போது "உதயம்" (1946), "போராட்டம்" (1947), "அண்ணா" (1949) "திராவிட அரசு", சீர்திருத்தவாதி" (1948), "முரசு" (1949), "தீப்பொறி" (1947) போன்ற இதழ்கள் வெளியிடப்பட்டன.

இவற்றைத் தவிர சமூக இதழ்கள், மருத்துவம், தொழில், சிறுவர் நலம் போன்ற பொருள் தலைப்புகளிலும் பல இதழ்கள் இம்மாவட்டத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

KAVERIPAKKAM: ITS PLACE IN THE ART AND HISTORY OF TAMIL NADU

V.N. Srinivasa Desikan

Kaveripakkam known as Avaninarayana Chaturvedi - mangalam, Kavidipakkam, Kaviripakkam and Vikramachola chaturvedimangalam, in the inscriptions, was a centre of great cultural activities. "Avaninarayana" is the surname borne by the Pallava King, Nandivarman III, after whom the village Kaveripakkam has been named as Avaninarayanachaturvedimangalam.

Though the Pallavas and the Cholas had their rule over this region, it was the Rashtrakuta King Krishna III, who had contributed a lot to the cultural activities as seen from the Kaveripakkam sculptures.

More than hundred sculptures from Kaveripakkam have come to this Museum. Mention may be made of archite - ctural pieces and sculptures of symbolic, Gajalakshmi, Dakshinamurthi and Brahma. A study of these reveals that, the structure is basically of Pallava idiom, influenced by the Rashtakuta and Chalukyan art.

THE ART AND ARCHITECTURE OF NORTH ARCOT DISTRICT.

K.Lakshminarayanan.

North Arcot is one of the few districts which can be proud of a rich heritage. It has an area of 12,200 sq. kilometres and there are forty nine ancient monuments of historical importance, besides twenty two monuments which have been declared as monuments of national importance. It was under the sway of the Pallavas, (6-9 Cent A.D), the Cholas (9-13th Century) the Pandyas (13-14th Centuries), the Chalukyas of Badami, the Rastrakutas, the Hoysalas and finally Vijayanagar. Apart from the Imperial powers, parts of the district were ruled by Banas, Malaimans, Kadavarayas, Adiyaman, Sambuvarayan etc.

The oldest monuments belong to the Pallavas, There are about ten rock cutcave temples in North Arcot District, which can be attributed to Mahendravarman I. All of them belong to early Mahendra style. There are mandapas with inner cells excavated in the free standing boulders.

Kavidipakkam is a small village, 10kms from Walajapet which had three temples constructed on the orders of the Rastrakuta King Krishna III. North Arcot is also famous for Jain sculptures and inscriptions. Vallimalai in Kudiyatham taluk has a natural cave which has fine sculptures of Western Ganga ruler Rajamala.

The district has also monuments belonging to

p.t.o.

the Chola period. S.R.Balasubramaniam has identified twenty five sculptural temples of the Chola period., ranging from Vijayalaya (c.886-870 A.D) to Rajaraja III (1216-46 A.D.). Tiruvannamalai is an important place in North Arcot District which has the famous Arunachaleswarar temple. The temple covers an area of twenty four acres and represents the works of various Schools, the Chola, Pandya, Hoysala and Vijayanagar. Vellore, the capital town of the district has a very interesting history. It was the capital town of the Vijayanagar Empire.

COINS FROM NORTH ARCOT DISTRICT

N.Sankaranarayana

North Arcot is a multifaceted district, rich in archaeological monuments, places of historical importance and natural resources. It was under the sway of the Pallavas, the Cholas, the Vijayanagar and finally under t he British. The art, architectural and other aspects of this district has been studied well. But the numismatic history of the district has not received the attention of the scholars. Though it formed a part of the Chola , Pallava , Vijayanagar and other kingdoms, it is to be noted that the district has not yielded a number of coins. From this district we get coins of late period, viz. the British period. Only two decades back, in this district, a treasure trove was found in Andipatti village, Chengam taluk, which created history in the numismatic study in Tamil Nadu. The hoard consisted of 143 lead coins having legend in Tamil Brahmi characters datable to about the 3rd century A.D.

In this paper an attempt is made to bring to the notice of the scholars the coins so far discovered and t he inscriptional references to coins from this district.

MINERALS OF NORTH ARCOT DISTRICT

E. George Jesudossan

The progress of advancement of any country or nation depends on its industrialisation. For industrialisation, the chief raw materials required are minerals.

All the minerals occuring in nature do not occur at one place or in any one country or nation. They occur distributed in various parts of the globe.

In North Arcot district some minerals such as Vermiculite, Barite, Graphite, Magnesite, Kankar, Steatite, Feldspar, Reh salt, Red Ochre, White clay, Sillimanite, Apatite, Iron ore, Pyrrhotite and Galena occur.

Their distribution , composition and some important uses are dealt with in this paper.